# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை-600 032.
தொலைபேசி: 044-22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை-600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
************

மனு எண்: 376/2017/ஊராட்சி

ஆணை எண்: 059/2017

நாள்: 27/03/2017

பெயரிடப்படவில்லை - மனுதாரர்

1. முன்னாள் ஊராட்சி தலைவர்,
   மின்னாம்பள்ளி ஊராட்சி.
2. பஞ்சாயத்து செயலாளர், மின்னாம்பள்ளி ஊராட்சி,
   கரூர் மாவட்டம்.

- எதிர் மனுதாரர்கள்

## ஆணை

கரூர் மாவட்டம், மின்னாம்பள்ளி ஊராட்சியிலிருந்து முகவரி மற்றும் கையொப்பமிடாத மார்ச் 2017ல் பெறப்பட்ட மனுவில், மின்னாம்பள்ளி முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர், ஊராட்சி மன்ற செயலாளர் மற்றும் ஊராட்சி மன்ற உறுப்பினர் திரு. சதீஸ் மற்றும் கிராம உதவியாளர் ஆகியோர்கள் பதவி அதிகாரத்தை பயன்படுத்தி அரசு நிலம் ஆக்கிரமிப்புக்கும், அரசு நிதிகளை மோசடி செய்தவர்களுக்கும், அரசு பொது குடிநீர் குழாய் கட்டிடத்தை சிதைத்தவர்களுக்கும் உடைந்தையாக இருந்துள்ளார்கள் என்றும், பொது இடத்தை ஆக்கிரமிப்பு செய்து வாழைமரம், தென்னை மரம் மற்றும் முருங்கை மரங்கள் வளர்ப்பதை கண்டு கொள்ளாமல், சட்டவிரோத

செயல்களுக்கு உடந்தையாக உள்ளார்கள் எனத் தெரிவித்து, தக்க நடவடிக்கை எடுக்கக் கோரப்பட்டுள்ளது.

2. 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)-ன்படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே இம்மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், கரூர் மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்ப முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு மார்ச், திங்கள் 27-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//---

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

சென்னை-600 032

செயலாளர்.

7/4/17

பெறுநர்
மாவட்ட ஆட்சித் தலைவர்,
கரூர் மாவட்டம்
கரூர்.